# தமிழில் வல்லின ஒற்று (க், ச், த், ப்) மிகும் இடங்களும் மிகா இடங்களும்

*(working draft…)*

இங்கே “வல்லின ஒற்று” என்பதைச் சுருக்கமாக “ஒற்று” என்று குறிப்பிடுகிறேன்.

இந்த “ஒற்று” என்பது இரண்டு தமிழ்ச் சொற்களின் இடையே இரட்டித்து வருதலையும் இரட்டிக்காமல் இருப்பதையும் பல வகையில் விளக்கிக் கூறலாம்.

மரபிலக்கண நூல்கள் இந்தக் கருத்துக்களை எவ்வளவு விரிவாக உரைக்கின்றன என்பதை முறையாகத் தமிழிலக்கணம் பயின்றோர் அறிவார்கள்.

குறிப்பாக, “நின்ற சொல்லின் வடிவம் என்ன? வரும் சொல்லின் தொடக்கம் என்ன? இரண்டு சொற்களையும் சேர்க்கும் போது என்ன மாற்றம் தேவை? அந்த மாற்றம் ஏன் தேவை?” என்று பலவகையில் விளக்கிக் கொடுக்கப்பட்டுள்ள இலக்கண விதிகள் இன்று சிலரிடம் மட்டுமே (எழுத்து வடிவிலோ கருத்து வடிவிலோ) இருக்கும் செல்வம்!

அத்தனைக் கருத்துக்களையும் தெரிந்துகொள்வதற்குத் தேவையான ஆர்வமோ நேரமோ பொறுமையோ பலருக்கும் இருந்ததில்லை; இனியும் இருக்காது!

அதனால் **எல்லா விதிகளையும் விவரிக்காமல், அடிக்கடி வழங்கப்படுகின்ற சிலவற்றை மட்டும், கூடிய அளவிற்கு எளிமையாகவும் சுருக்கமாகவும் விளக்க** முயல்கிறேன்.

இங்கே **சில விதிகளும் சில எடுத்துக்காட்டுக்களும்** மட்டும் தருகிறேன்.

தேவையானால் **மற்ற விதிகளும் எடுத்துக்காட்டுக்களும்** தருவதில் தயக்கமில்லை.

Draft

© dr. v.s.rajam, 2005

## வல்லின ஒற்று மிகும் இடங்கள்

1. கீழே தரப்பட்டிருக்கும் சொற்களை அடுத்து ஒற்று மிகும்.

அங்கு, இங்கு, எங்கு
அத்தனை, இத்தனை, எத்தனை
அதற்கு, இதற்கு, எதற்கு, அதுக்கு, இதுக்கு, எதுக்கு
அந்த, இந்த, எந்த
அடிக்கடி
அப்படி, இப்படி, எப்படி
அவ்வழி, இவ்வழி, எவ்வழி
அனைத்து, எனைத்து
எல்லா

2. ஒரு சொல் கீழே தரப்பட்டிருக்கும் எழுத்துக்களில் முடிந்தால், அந்தச் சொல்லை அடுத்து ஒற்று மிகும்.

இவற்றுள், "ய்" என்ற எழுத்துக்கு முந்தின ஒலி நெட்டொலி, அதாவது நெடில் (long vowel), ஆக இருக்க வேண்டும்.

--க்கு, --ச்சு, --ட்டு, --த்து, --ப்பு, --ற்று
--ய், --ர், --ழ்

எடுத்துக்காட்டு

சுக்கு **ப்** பொடி
வாணலியில் எண்ணை விட்டு **க்** காய்ந்ததும் ...
கரைத்து வைத்து **க்** கொள்ளவும்
பருப்பு **ப்** போட்டு **க்** கீரை கடைந்தேன்

தேங்கா**ய் த் து**ருவல்
குழாய் **ப்** புட்டு
தயிர் **ப்** பச்சடி
கீழ் **க்** கண்ட ...

3. ஒரு சொல் "ஆக" அல்லது "ஆய்" என்ற ஒலியில் முடிந்தால், அந்தச் சொல்லை அடுத்து ஒற்று மிகும்.

© dr. v.s.rajam, 2005

எடுத்துக்காட்டு

தெளிவாக ப் பேசு
தெளிவாய் த் தெரிந்தது

4. ஒரு சொல் “ஐ” என்ற ஒலியில் இரண்டாம் வேற்றுமையைக் குறிக்கும் வண்ணம் முடிந்தால், அந்தச் சொல்லை அடுத்து ஒற்று மிகும்

எடுத்துக்காட்டு

அம்மாவை **க்** கேள்
கதையை **ச்** சொல்லு
கதவை **த்** தட்டு
வேலையை **ப்** பார்

5. பண்பைக் குறிக்கும் சில சொற்கள் தொகைச் சொல்லின் முதல் பகுதியாய் வரும்போது (as the first part of a compound word) ஒற்று மிகும்.

எடுத்துக்காட்டு

அகல **க்** கால்
சிறப்பு **த்** தொழில்
நடு **த்** தெரு
நீள **க்** கை
பொது **ப்** பெயர்
வட்ட **ப்** பலகை

6. சில வகை வினையெச்சச் சொற்களை (அதாவது, adverb வகைச் சொற்களை) அடுத்து ஒற்று மிகும்.

இந்த வகைச் சொற்கள் “அ” என்ற ஒலியிலோ
“இ” என்ற ஒலியிலோ “உ” என்ற ஒலியிலோ முடியும்.

இந்தச் சொற்களுள் “உ” என்ற ஒலியில் முடியும் சொல்லில், அந்த “உ” என்ற ஒலியைத் தாங்கிய எழுத்துக்கு முந்தின ஒலி மெல்லின ஒலியாகவோ (ங், ஞ், ண், ந், ம், ன்) இடையின ஒலியாகவோ (ய்) இருக்கக் கூடாது.

எடுத்துக்காட்டு

காய் நறுக்க **ப்** போனேன்
பெயர்களைச் சுட்டி **க்** காட்டினால் நல்லது

புர**ண்டு** படுத்தேன் (படுத்தேன் என்ற சொல்லுக்கு முன்னால் **ப்** என்ற ஒற்று மிகவில்லை)

அவியல் செ**ய்து** பார்த்தேன் (பார்த்தேன் என்ற சொல்லுக்கு முன்னால் **ப்** என்ற ஒற்று மிகவில்லை)

7. இரட்டித்து வரும் ஒரு சொல் வினையெச்சப் பொருள் (adverbial sense) தந்தால் இடையில் ஒற்று மிகும்.

எடுத்துக்காட்டு

கொதிக்க **க்** கொதிக்க ...
சுட **ச்** சுட ...
பறக்க **ப்** பறக்க ...

==================================================

## வல்லின ஒற்று மிகா இடங்கள்

1. கீழே தரப்பட்டிருக்கும் சொற்களை அடுத்து ஒற்று மிகாது.

அங்கே, இங்கே, எங்கே
அங்கேயே, இங்கேயே, எங்கேயோ
அது, இது, எது
அதுவோ, இதுவோ, எதுவோ
அதோ, இதோ, எதோ, ஏதோ
அப்படியே, இப்படியே, எப்படியோ
அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு, எவ்வளவோ
அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு, எவ்வாறோ
உயரே, கீழே, கீழேயே, மேலே, மேலேயே
உள்ள
என்ன, என்னவோ
என்ற, என்று, போன்ற
சில, பல

2. ஒரு சொல் எழுவாயாக (as the subject of a sentence) வந்தால், அந்தச் சொல்லை அடுத்து ஒற்று மிகாது

எடுத்துக்காட்டு

தம்பி, பாரு இங்கே (Here, தம்பி is எழுவாய்.)

3. இரண்டு சொற்கள் எண்ணுப் பொருளில் (in an enumerative sense) ஒன்றை ஒன்று தொடர்ந்து வந்தால் இடையில் ஒற்று மிகாது.

எடுத்துக்காட்டு

காசு பணம்
எள்ளு கொள்ளு
பட்டி தொட்டி

4. இரண்டு சொற்கள் வினைத்தொகையாக ஒன்றை ஒன்று தொடர்ந்து வந்தால் இடையில் ஒற்று மிகாது.

"வினைத்தொகை"? மிகச் சுருக்கமாக?
இந்தச் சொற்களில், முதல் சொல் ஒரு தொழிலைக் (an action) குறிக்கும். அடுத்து வரும் சொல் பெயரைக் குறிக்கும். இரண்டு சொற்களுக்கும் இடையில் காலத்தைக் காட்டும் எழுத்து (tense marker) இருக்காது. (இன்னும் விளக்கம் சொல்லலாம்.)

எடுத்துக்காட்டு

**ஊறு காய்**
**ஆடு குதிரை**
**சுடு சோறு**
**வறு பயறு**

5. ஒலியையோ (sound) பண்பையோ (attribute) வடிவையோ (shape) குறிக்கும் ஒரு சொல் **இரட்டித்து வரும்போது** (when doubled) இடையில் ஒற்று மிகாது.

எடுத்துக்காட்டு

கல கல, கொழு கொழு, சட சட, சல சல, திடு திடு, பள பள

6. கீழே குறிப்பிட்டுள்ள, **எண்ணைக் (number) குறித்த சொற்களை** அடுத்து ஒற்று மிகாது.

   ஒரு, இரு, இரண்டு, மூன்று, நாலு, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, ஒன்பது

7. ஒரு சொல் ஏதாவது ஒரு **பண்பைக் குறித்தால்** (as an adjective or attribute), அந்தச் சொல்லை அடுத்து ஒற்று மிகாது.

   இவ்வகைச் சொற்கள் "இய" என்ற ஒலியிலோ "உ" என்ற ஒலியிலோ முடியும்.

   ஏற்ற
   கெட்ட
   சிறிய, சிறு, சிறுகிய, சிறுத்த, சின்ன
   நல்ல
   பழைய, புதிய, புது
   பெரிய, பெருகிய, பருத்த, பெருத்த
   முந்தைய

   இந்த **விதிக்கு விலக்காகச்** சில சொற்கள் இலக்கியங்களிலும் உலக வழக்கிலும் உள்ளன:

   சிறு **க்** கண் பன்றி (கபிலர், ஐங்குறுநூறு 266)

   கண்ணிநுண் சிறு **த்** தாம்பு (மதுரகவியாழ்வார், திவ்யப்ரபந்தம் 937)

   புது **ப்** புடவை

8. ஒரு சொல் "ஆன" என்ற ஒலியிலோ "ஆத" என்ற ஒலியிலோ முடிந்தால், அந்தச் சொல்லை அடுத்து ஒற்று மிகாது.

   அருமையான, அழகான
   குறுகலான, ஆழமான, தேவையான
   கேட்காத, தெரியாத, புரியாத

© dr. v.s.rajam, 2005

9. ஒரு சொல் ஒரே ஒரு "து" என்ற ஒலியிலோ "வு" என்ற ஒலியிலோ முடிந்தால், அந்தச் சொல்லை அடுத்து ஒற்று மிகாது.

கூறியது, செய்து, கேட்டது, சொன்னது, தேர்வு, நல்லது

==========================================================